ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு ஸ்வாமி

(வாழ்க்கை வரலாறு)



Karappan Kadu Shingaperumal Swamy
G/o Karappan Kadu Swamy

Author

வங்கீபுரம் பத்தங்கி குமாரவாடி

சே. இராமாநுஜாசார்யர்

(ஆசிரியர் : 'திருமால்')

பதிப்புரை

"ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" என்றார்போல ஸ்வாமிக்கு வலக்கை போலிருந்து, அந்தரங்க கைங்கர்யங்களைச் செய்துவரும் ஸ்ரீ உ.வே. குமாரவாடி ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமியால் அழகிய தமிழில் எழுதப்பெற்ற ஸ்வாமியின் சரிதத்துடன் தொடங்குகிறது இம் மலர் என்று 1966-இல் "ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்" "காரப்பங்காட்டுக் கருணைமுகில்" என்ற தலைப்பில் இச்சரிதம் பற்றிக் குறிப்பிட்டு, இதனைத் தன் மலரில் முந்துற முன்னம் வெளியிட்டது. பின்னர் காரப்பங்காடு ஸ்வாமி மணிவிழா மலரிலும், அடியோங்களது தனி வெளியீடாகவும் பிரஸுரிக்கப்பெற்றது.

'நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க எண்ணாறாத்துயர் விளைக்கும்' இவ்வுலகைவிட்டு, 7-8-71-ல் ஸ்வாமி திருநாடு அலங்கரித்தார். 'நாய்க்குடலில் நறுநெய் தொங்காதாப்போல்' இக்கொடுவுலகில் நீடிக்க மனமின்றி நீத்துச் சென்றிட்டார். 'ஓராயிரம் ஆண்டு ஓய்ந்துக்கிடந்த பின் வாராது போல் வந்த மாமணி' நம் ஸ்வாமி. அரிய உத்தமரின் தூய சரிதம் இப் பிரிவுத் துயரிடை நமக்குச் சற்று ஆறுதல் அளிக்கும் என்று கருதி, அதனை அப்போது மீண்டும் சிறு மாறுதலுடன் வெளியிட்டோம்.

உபயவேதாந்தவித்வான் காரப்பங்காடு ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவையொட்டி மீண்டும் இப்போது சிறு மாறுதலுடன் இந்நூல் வெளிவருகிறது.

நெஞ்சுள்ளவரை நீங்காத அவ்வுத்தமர் நினைவுக்கு முதல் அஞ்சலி மலராக வாழ்க்கை வரலாற்றினை வெளியிடுகிறோம்.

சே. இராமாநுசன்
(திருமால் ஆசிரியர்)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இருள் தருமா ஞாலத்துத்
தெருள்தருமா தேசிகன்

ஆத்ரேயாந்வய பூஷணாச்ச ஜநகாத் லப்த்வா
ந்ருஸிம்ஹார்யத:
சாஸ்த்ராணி ப்ரதிதாத் ததைவ வரதாசார்யாத் பரஸ்தாதபி
கோவிந்தார்ய பதாச்ரிதம் நிருபம ப்ரக்யாத வாக்வைபவம்
தாந்த்யாத்யாத்மகுணாகரம் குருவரம் ஸ்ரீவேங்கடார்யம் பஜே:

சீர்மிகுந்த ஆத்திரேயன் தெளிசிங்கப் பெருமாள் சேய்
கூர்மதியன் வரதார்யன் கொடுத்த அருங்கலைச் செல்வன்
பார்புகழும் கோவிந்தன் பதம்பணியும் வேங்கட நற்
பேர் பெற்றான் திருவடியே பெரும் பேறாம் நம் தமக்கே.

முன்னுரை

பகவானையே எல்லாமாகப் பற்றியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களை உண்டியே உடையே உகந்தோடும் ஸாமான்ய உலக மக்களோடு ஒக்க வைத்து எண்ணுவது முறையன்று; திருமாலடியார்களிடையே ஸத்கார யோக்யர், ஸஹவாஸ யோக்யர், ஸதாநுபவ யோக்யர் எனச் சில படிகளுண்டு; நம்மாலானதைக் கொடுத்து அனுப்பி வைக்கத் தகுந்தவர்கள் ஸத்கார யோக்யர்; இணங்கி உடனுறைந்து

மகிழத்தக்க நல்லோர் ஸஹவாஸ யோக்யர்: எப்போதும் பின்பற்றி இடைவிடாது பயனடையத் தக்க மஹாண்கள் ஸதாநுபவ யோக்யர். ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்கள் அனைத்தும் அமையப்பெற்றவர்கள் இவ்வுலகில் மிகச் சிலரே. அவருள்ளும் அநுபவ யோக்யரான உத்தமாதிகாரிகளைக் காண்பது மிக மிக அரிது; உத்தமாதிகாரிகளுக்கெல்லாம் ஒரு வைத்த மாநிதி போல் வாய்த்தவர் நம் காரப்பங்காடு சுவாமி.

இருள் தரு மா ஞாலம்

இன்று உலக ஜனத்தொகை நாளுக்கு நாள் கோடிக் கணக்கில் அதிகரித்து வருகிறது. தினமும் பல பிரச்னைகள் தோன்றி நம்மை உலுக்கி வருகின்றன. இதற்கிடையே 'ஒருமைப்பாடு' கோஷம் வானளாவக் கேட்கிறது; முறை திரிந்த சிந்தனை, வரை கடந்த பேச்சு, நெறி தவிர்ந்த செயல்கள், இன்று சுதந்திரத்தின் பேரால் எங்கும் தூண்டிவிடப்படுகின்றன. நமோ மதச்சார்பற்ற ஓர் அரசின் கீழ்க்குடிகள். வேதரிஷிகள் காலத்தும், ஆழ்வார் ஆசார்யர்கள் காலத்தும் இல்லாத பல புதிய அயல்நாட்டு மதங்களும் நடைமுறைகளும் இங்கு வந்து வேர் ஊன்றி உரிமை பெற்று நம் வாழ்வு நலிந்து வருகின்றது. விஞ்ஞானப் புதுமைகள் ஒரு புறம் வாழ்க்கையில் விந்தையான பல மாறுதல்களைச் செய்து, நம்மை மயக்குகின்றன.

தத்துவஞானி என்று கொண்டாடப்பெறுகிற ஒருவர் இன்று (1966) நமக்கு ராஷ்டிரபதி. அவர் உயர் பதவியினர்; உலகம் சுற்றிய பிரமுகர். சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் அவர் கூறியது நமக்கும் குறிக்கொள்ளத் தக்கது. "உலகைச் சுற்றிப் பார்த்தேன்; விஞ்ஞானத் துறையில் எங்கும் விரைவான முன்னேற்றம் காண்கிறது. ஆனால் மக்கள் உள்ளத்திலோ

இருள் கவிந்து சூனியமே நிலவுகிறது; ஓரிடத்திலும் மன நிம்மதியோ வாழ்க்கை அமைதியோ காண முடிய வில்லை”என்று ஏக்கத்தோடு அவர் வெளியிட்டடார். இன்றும் அந்நிலை தொடர்கிறது!

இன்றென்ன, என்றுமே 'இருளே இவ்வுலகத்தியற்கை' என்றனர் ஞானிகள். இருளும் மருளும் நமக்கு விளைவிப்பது பெரும் துன்பமே. பிணி பசி மூப்புத் துன்பம் இவற்றுக்கிடையே கண்டு, கேட்டு, உற்று, மோந்து, உண்டு, உழலும் ஐங்கருவி காணுவதோ சிற்றின்பம்தான்! இருள்கொள் துன்பத்து நாம் மருள் கொண்டு இளைப்பதே நம் நீண்ட நாளைய சரிதம்.

ஈசன் பரப்பிய ஞான ஒளி

இம் மண்ணுலகில் நம் நிலை கண்டு இரங்கும் இறைவன் ஏற்கெனவே நமக்கு நிலையான வாழ்வுக்கு வழி வகுத்தவன்:

'கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள்' செய்தவன்.

இருள் தருமாஞாலத்தில், அச்சுத பானுவாய் அவதரித்து அரியன செய்து, ஈச்வரனாயிருந்தும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டு, கீதோபதேசமும் செய்தருளினான்.

முதலில் பிரமனைப் படைத்து, அவனுக்கு வேதங்களை ஓதிவைத்தபோது, அப்பிரமன் அதனைக் கைகழிய விட்டுக் கலங்கி நின்றது போலவே, அர்ஜுனனும் கீதாசார்யனின் வார்த்தையை அப்போதே மறந்து மயங்கி நின்றான்.

அச்சுதபானுவுக்கு ஆகாத கார்யம் ஆழ்வாராகிற ஆதித்யன் உதித்தபோது கைகூடிற்று. 'ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல்' இவ்வுலகில் இருந்த வரையில் ஆழ்வார் பிறரையும் வாழச் செய்தார். ஆனாலும், 'காலாழும், நெஞ்சழியும், கண்சுழலும்' என்கிறபடியே பக்தி பரவசராய் 'கொடு உலகம் காட்டேல்; இருள் தருமா ஞாலத்து இனிப் பிறவி யான் வேண்டேன்' என்று இவ்வுலகைக் கைவிட்டுச் செல்லத் துடியாய்த் துடித்தார். நம்மாழ்வாராகிற நல்ஞாயிறு மறைந்த பின் மீண்டும் கலியிருள் நம்மைச் சூழ்ந்தது.

எம்பிரான் திருவருளால் பிறகு, 'ராமாநுஜ திவாகரர்' தோன்றினார். 'கலியும் கெடும் கண்டுகொண்மின்' என்று முன்னரே ஆழ்வார் தம் ஞானக் கண்ணால் கண்டு, 'பொலிக பொலிக' என்று மங்களாசாஸனம் செய்து வைத்தபடி, யதிராஜ வைபவத்தில் இவ்வுலகம் ஒளி பெற்றுத் திகழ்ந்தது. கலியிருள் நடுவே ஒரு க்ருதயுகம் எழுந்தது.

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா உலகோர்களெல்லாம்
அண்ணல் இராமாநுசன் வந்து தோன்றிய அப்பொழுதே
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு நாரணற்கு ஆயினரே;

தொடரும் குருபரம்பரை

லக்ஷ்மீ நாதாக்ய ஸிந்தௌ சடரிபு
ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம்
நாதா த்ராவப் யஷிஞ்சந் தததனு
ரகுவராம் போஜ சக்ஷுர் ஜலாப்யாம்

கத்வதாம் யாமுநாக்யம் ஸரீதமத
யதீந்த்ராக்ய பத்மாகரேந்த்ராம்
ஸம்பூர்ய ப்ராணி ஸஸ்யே ப்ரவஹத
பஹுதா தேசிகேந்த்ர ப்ரமேகை:

லக்ஷ்மீநாதானகிற பெருங்கடலில் ஆழ்வாராகிற காளமேகம் படிந்து, காருண்யமாகிற நீரைப் பருகி ஸ்ரீமந் நாத முனிகளாகிற பர்வதத்தின் மேல் பெய்தது. அங்கிருந்து உய்யக்கொண்டார், மணக்கால் நம்பிகளாகிற அருவிகள் வழியாக ஆளவந்தாராகிற பேராற்றிலே சேர்ந்து, அனந்தரம் எம்பெருமானாராகிற பெரிய ஏரியிலே தேங்கிற்று. ஏழுபத்து நான்கு ஸிம்மாஸனாதிபதிகளாகிற மதகுகளிலிருந்து புறப்பட்டு, சேதனர்களாகிற பயிர்களுக்குப் பாய்கிறது. ஸர்வேச்வரவனுடைய க்ருபாரஸம் ஸகல சேதனரிடத்திலும் பாயும்படி செய்து, ஸித்தாந்தத்தை வளர்த்து வந்த படியால் தான், நம்பெருமாள் இதற்கு 'எம்பெருமானார் தரிசனம்' என்று பெரிட்டதாக மணவாள மாமுனிகள் அருளிச் செய்தார்.

இப்படி, எம்பெருமான் இவ்வுலகில் அறியாமை இருள் போக்கும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டான்; ஆனால் ஆசார்யத்வமோ, எம்பெருமானாரையே விரும்பி நின்றது.

கடலளவாய திசை எட்டினுள்ளும், கலியிருளே
மிடை தருகாலத்து இராமாநுசன் மிக்கநான் மறையின்
சுடரொளியால் அவ்விருளைத் துறந்திலனேல் உயிரை
உடையவன் நாரணன் என்று அறிவாரில்லை உற்றுணர்ந்தே.

மாமுனி நிகமனம்

'உலகுக்கு ஓர் ஆசார்யன்' எனத் திகழ்ந்த யதிராஜர் காலத்தும், பின்பும் அவரது திவ்யாஜ்ஞைப்படி நாள்தோறும்

திருவரங்கச் செல்வத்தோடு, ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயும் தளிர்விட்டுத் தழைத்து ஓங்கியது. எம்பெருமானாரின் ஞான ஒளியால் பொலிந்து நின்ற பூர்வாசார்ய பரம்பரை மணவாள மாமுனிகளோடு பூர்த்தி பெற்று நின்றது.

ராமாநுஜ திவாகரன் அஸ்தமித்ததும் உலகில் படிப்படியே மீண்டும் கலியிருள் சூழ்வதை மாமுனிகள் கண்டார். நம்பால் கருணை கூர்ந்து, நமக்கு ஒரு நல்வழி காட்டிச் சென்றார், தம் உபதேசரத்தின மாலையில். இவ்விருள் மண்டிய உலகில் நமக்குக் கை விளக்காக உதவும் அந்நிகமனப் பாசுரம் வருமாறு:

பூருவாசாரியர்கள் போதம் அனுட்டானங்கள்
கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் -- தேறி
இருள் தருமாஞாலத்தே இன்பமுற்று வாழும்
தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து

என்பதே அந்த நல்வழி.

மாமுனி காட்டிய மாண்புடைநெறியில், 'எம்பெருமானார் திருவடிகளே நமக்குத் தஞ்சம்' என்று நமக்குத் தெருள் தருமா தேசிகனாய்த் திகழ்ந்தவர் நம் காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி.

இரவும் பகலும்போல் அஞ்ஞான மூட்டமும் மெய்ஞானத் தேட்டமும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கிறது. இதுவரை இருள் தருமா ஞாலத்தின் வரலாறு ஒருவாறு கண்டோம்; இனி இதில் தெருள் தருமா தேசிகனாய்த் திகழ்ந்த நம் ஸ்வாமியின் வைபவத்தில் ஈடுபடுவோம்.

கார் - அப்பன்- காடு

'கங்கையில் புனிதமாய காவிரி' பாயும் சோழ நல்வள நாட்டில் ஸ்ரீராஜகோபாலன் உகந்து எழுந்தருளியுள்ள நிலப்பகுதி ராஜமன்னார்குடி. ஸ்ரீவைஷ்ணவர்கள் நிறைந்த ஐந்து கிராமங்கள், அப்பகுதியில் 'பஞ்ச க்ராமம்' என்று பிரஸித்தமாய் விளங்குகின்றன. பாண்டவர் நடுவே அர்ஜுனன் போன்று அவற்றுள் காரப்பங்காடு சிறப்பெய்தி விளங்குகிறது. கார்-அப்பன்-காடு 'கானகம் படி உலாவியுலாவி' என்று கரியான் ஒரு காளை உறையும் க்ஷேத்திரத்தில் அமைந்துள்ளது. காஞ்சியிலிருந்து திருமாலடியார் பலர் வந்து குடியேறினர். அடியவர்களை விடாது பின் தொடர்ந்து பேரருளாளனும் அங்கு வந்து கோயில் கொண்டான்; அவ்வருளாளனே, கீதாசார்யன் ஸந்நிதிக்கு ஓர் ஆசார்ய ரத்தினத்தை வழங்கி, வரதனாய்த் திகழ்கிறான்.

சிங்கப் பெருமாள்

பிரபன்னர்களான தபஸ்விகளின் உறைவிடமாகையால் காரப்பங்காடு ஒரு சிறந்த தபோவனமாயும் வித்யாரண்யமாயும் திகழ்கிறது; வனம் என்ற போதே சிங்கத்தின் நினைவு எழுவது இயல்பு. வித்யாரண்யத்தில் சஞ்சரித்த சீரிய சிங்கம் நம் சிங்கப்பெருமாள் ஸ்வாமி. அந்த ஸ்வாமியின் புலமையும் புகழும் தென்னாடெங்கும் பரவி நின்றன. வாழையடி வாழையாக வித்வான்கள் வழி வந்தவர் அந்த ஸ்வாமி; முடி சூடாமலே சிங்கம் காட்டின் வேந்தனாமாப் போலே தம் பிறப்பாலேயே வித்வத் பரம்பரையினராயினார். அந்த சுவாமி பண்டித கோஷ்டிகளில் ஞான, பக்தி, வைராக்யங்களால் சிறந்து மிக்கோங்கி, பெயருக்கு ஏற்பச் சீரிய சிங்கமாகவே திகழ்ந்தார்.

சிங்கப் பெருமாள் ஸ்வாமி முக்காலம் உணர்ந்த மூதறிஞர்; முறையோடு பயின்ற வேதாந்த வித்தகர்; ஸம்பிரதாயத் தெளிவு கண்ட தெள்ளிய சிங்கர்; அஞ்ஞான இருள் மண்டிக்கிடந்த சென்னை போன்ற சில பகுதிகளில் தம் செலவில் வந்து தங்கி, நல்லறிவு கொளுத்திய அருள் பண்பினர்; உலகம் போற்றும் புளியங்குடி ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்யம் பயின்றவர். வேதாந்த அறிவுற்றுத் தர்க்கத் தீ விழித்து, பார்புகழும் கீர்த்தியினால் மூரிநிமிர்ந்து, வித்வத் கோஷ்டியில் முழுங்கிப் புறப்பட்ட அச்சிங்கத்தின் குருகே நம் சுமாமி.

பரகத ஸ்வீகாரம்

ஸம்ப்ரதாயத்தில் பரகத ஸ்வீகாரம் என்பது ஒரு முக்கிய விஷயம். பகவான் இவனை ஏற்பது என்றும், இவன் அவனைப் பற்றுவது என்றும் ஸ்வீகாரத்தை இருவகையாகப் பகிர்ந்து கூறுவர்; அவற்றுள், இறைவன், ஏற்கும் அப்பற்றே கார்யகரம் என்பதை யாவரும் இசைவர்.

அதுபோன்றே ஆசார்ய விஷயத்திலும் உண்டு. ஆசார்யனை சிஷ்யன் பற்றுவதைக் காட்டிலும், ஆசார்யன் சிஷ்யனைத் தம்மவன் என்று அபிமானிப்பதே சாலச் சிறந்தது என்பது ஞாலம் ஒப்பத் தீர்மானித்த ஒன்று.

நம் ஸவாமி அவதரிப்பதற்கு முன்னமேயே அவரது மாதாமஹராயும், சிறந்த நல் ஆசார்யராயும் விளங்கிய சிங்கப் பெருமாள் ஸ்வாமியின் திருவுளளம் நம் ஸ்வாமியை எதிர்நோக்கி நின்றது.

ஸ்ரீ சிங்கப் பெருமாளுக்கு புருஷ ஸந்ததி இல்லாமையால் பெண்வழிப் பேரனை ஸ்வீகரிக்கத் திருவுள்ளமானார். அவர்தம்

இரு குமாரத்திகளில் ஒருவர் 'என்ன நோன்வு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறு உடையாள்' என்னும் புகழுக்கு இலக்கானார். சிங்கப்பெருமாள் ஜோதிஷம் வல்லவராகையால், தம் பிள்ளையில்லாக் குறையைப் பெண்வழி ஸந்ததியில் நிறை செய்து கொள்ளும் உணர்வுடன் சீரிய நற்பிள்ளையை அவர் விரும்பி நின்றார்.

நம் ஸ்வாமியின் ஜனக பிதா திருவேங்கடத்தையங்கார் என்னும் திருமாமமுடையவர்; நம் ஸ்வாமிக்கும் வேங்கடார்யன் என்றே திருநாமம். பிதாவுக்கும் புத்திரனுக்கும் ஒரே பெயர் என்பது சற்று வியப்பளிக்கும் விஷயம். சிங்கப் பெருமாள் சுவாமி தந்தையின் பெயரையே தாம் திருவுள்ளம் பற்றிய இளைய பேரனுக்குச் சூட்டினார்; கருவறையிலிருந்தே காத்திருந்து, கண்ணுங் கருத்துமாய் ஊட்டி வளர்த்து, தக்க பருவத்தில் சடங்குகள் நிகழ்த்தி, தத்தும் கொண்டார். பாரத்வாஜ கோத்திரத்தில் உதித்து, ஆத்திரேயரானார் வேங்கடார்யர்.

சிங்கப் பெருமாள் திருவுள்ள வெற்றி

சிங்கப் பெருமாள் சுவாமி, வேங்கடார்யருக்கு இளமையிலேயே உபநயனாதிகளை முறைப்படி செய்து வைத்து, நற்கலைகளை ஒதத் திருவையாறு ஸம்ஸ்க்ருதக் கல்லூரிக்கு அனுப்பிவைத்தார். வேங்கடார்யர் வேதாந்தத்துக் கென்றே இட்டுப் பிறந்தவர்; சிங்கப் பெருமாள் சுவாமி காலத்திலேயே, ஸம்பிரதாயத்தில் சண்டைச் சுவடிகள் மலிந்து தெளிந்த நீர்த் தடாகமாய்த் திகழ்ந்த நம் தர்சனத்தில் மதயானைகள் புகுந்து சேறும் சகதியுமாய்க் குழப்பின. நிந்தைக் கந்தைகள் நிதமும் வெளியாகும் அந்நாளில் நம் பூர்வாசார்ய போதம் அனுஷ்டானங்களைப் கூறுவார் தொகை

குறையத் தலைப்பட்டது. அந்த நிலை சிங்கப்பெருமாளுக்கு வேதனையளித்தது. அந்தநிலையை மாற்றத் திருவுள்ள மானார், தம் முதுமைக் காலத்தில் நம் சிங்கப்பெருமாள் சுவாமி. அவர் திருவுள்ளப்படியே, சென்ற விசுவாவசு பங்குனி புனர்வஸு திருநக்ஷத்திரத்தில், (1906) சக்கரவர்த்தி திருமகனைப்போலே சிங்கக் குருகாய் வந்தவதரித்தார் வேங்கடவர். மத யானைகள் கொட்டம் அடங்க, வேதாந்தத்துக்குப் பிரகரணமாக உள்ள பல சாஸ்திரங்களையும் பயிலத் தம் குமாரனுக்குத் தக்க ஏற்பாடு செய்து வைத்தார் சிங்கப்பெருமாள் ஸ்வாமி. அவர் திருவுள்ள வெற்றியை இன்று நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம்.

திருவையாறு கல்லூரியில் வேங்கடவர் தர்க்கம் கற்கும்போதே மற்ற மாணவர்க்கும் பாடஞ் சொல்லும் திறன் பெற்று விளங்கினார்.

அக் கல்லூரி ஆசிரியர் பலரும் நம் ஸ்வாமியின் திறல் கண்டு அதிசயித்தனர்; விளக்கிக் கூறுவதில் வல்ல விளக்குடி சீநிவாஸாசார்யர் சுமாமி, தெள்ளெனத் தெரிவிக்கும் ஆற்றல் மிக்க வெண்ணாற்றங்கரை சீநிவாஸாசார்யர் சுவாமி, வெற்றி வாகை சூடும் வகையில் வாதிக்கும் திறன்வாய்ந்த விஜயேந்த்ராசார் அவர்கள் ஆகியோரிடம் தர்க்கம் பயின்றவர் நம் வேங்கடவர்.

ஸச்சிஷ்யர்

மொழியறிவும் (வ்யாகரணம்) அளவை ஞானமும் (நியாயம்) முற்றும் பெற்றுச் சிஷ்ய லக்ஷணங்கள் அனைத்தும் கூடியவராய், வேதாந்த உபதேசம் பெறத் தகுதியுற்றார் நம் வேங்கடவர்.

"ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ ஸமுசிதசரித: தத்த்வ

போதாபிலாஷீ: சுச்ருஷு: த்யக்தமான:

ப்ரணிபதநபர:, ப்ரச்நகால ப்ரதீக்ஷ,

சாந்தோ தாந்த: அநஸூயு: சரண முபகத: சாஸ்த்ர

விச்வாஸசாலீ சிஷ்ய:"

என்கிறபடி சிங்கப் பெருமாளிடம் சிஷ்யராய் அமைந்தவர் நம் ஸ்வாமி. திராவிட வேதாந்தமான பகவத் விஷயம், வடமொழி வேதாந்தமான ஸ்ரீபாஷ்யம், திருமந்த்ரார்த்தம், அருளிச் செயல்களான திருப்பாவை போன்ற திவ்யப் பிரபந்தங்கள் ஆகியவை நம் ஸம்ப்ரதாயத்துக்கு உயிரானவை. ஆகையால், அவற்றை மாதாமஹர் தாய் வழிப் பாட்டனார் சிங்கப்பெருமாள் ஸ்வாமியிடமே முதலில் சேவித்தார். மைசூர் அனந்தாழ்வான் ஸ்வாமியின் வாதாவளியையும் அவரிடமே அதிகரித்தார்.

தேசிக வரதர்

சிங்கப் பெருமாள் சுவாமியின் காலத்தை யொட்டிக் காரப்பங்காட்டில் மிகவும் பிரசித்தராக விளங்கியவர் தேசிக வரதாசாரியர் சுவாமி. உலகம் நிறைந்த புகழாளர். பிற்காலத்தில் உத்தமாச்ரமம் ஸ்வீகரித்து துறவு ஏற்று உகந்தருளிய நிலங்கள் பலவற்றிலும் பகவானுக்குத் திருப்பணிகள் பல செய்து கைங்கர்யத் திருவுடன் திகழ்ந்தவர். ஸ்ரீரங்கநாராயண ஜீயராய் எழுந்தருளியிருந்தவர்; அருங்கலைச் செல்வர்; ஹாஸ்யம் நிறைந்த ஆற்றல் மிகுந்த ப்ரவசனங்களாலும், அருங்குணச் சிறப்பாலும் சென்னை வாசிகள் பலரையும் தம்பால் ஈர்த்த பண்பாளர். ஸ்ரீபாஷ்யத்துக்கு விரிவுரையான ச்ருத ப்ரகாசிகை, ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்

களின் தொகுப்பான ஸ்ரீவசனபூஷண திவ்ய சாஸ்த்ரம், நம்மாழ்வார் திருவுள்ளத்தைப் படம் பிடித்துக்காட்டும் ஆசார்ய ஹ்ருதயம் போன்ற பல அரிய நூல்களை தேசிக வரதாசார்ய சுவாமியிடம் அதிகரித்தார் நம் சுவாமி. தேசிகன் என்ற சொல் ஆசார்யனைக் குறிக்கும்; வரதர் என்ற சப்தம் ஆசார்யனாகிய அரிய பொருளைத் தந்தவர் என்பதைக் காட்டும். நமக்கு சுவாமியை நல்கிய வரதர் தேசிகவரதராகத் திகழ்வதில் வியப்பென்ன?

ஸமாச்ரயணம்

இப்படி இரண்டு ஆசார்ய ச்ரேஷ்டர்களால் ஞான நற்கலைகள் அருளப்பெற்ற நம் சுவாமி பார்புகழும் கோவிந்தர் பதம் பணிந்தவர். சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் முன்னோர் ஸ்வயமாசார்ய புருஷர்களாக இருந்தவரே. ஆயினும் ஆசார்யபதம் வகிப்பதன் அருமையும் பெருமையும் கருதி அந்தப் பொறுப்பினைத் தவிர்ந்து, திருமலை அனந்தாண்பிள்ளை ஸந்ததியினரிடம் ஆச்ரயித்தனர். அவ்வழியில் வந்த ஆசார்யரே கோவிந்தப்பங்கார் சுவாமி. இந்த சுவாமியும் ஸ்ரீரங்கநாராயண ஜீயராக எழுந்தருளியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு

சாஸ்திரங்களையும் சாஸ்திர ஸாரங்களையும் ஆசார்யர்கள் அநுக்ரஹித்தபடி முறைதப்பாதவராய், தாம் பிறந்து, வளர்ந்த இடத்தை விட்டு, 1930-இல் வெளிப்போந்தார் நம் சுவாமி. முதன்முதலில் அனைத்துலகம் வாழப்பிறந்த யதிராஜ மாமுனிவர் அவதரித்த ஸ்ரீ பெரும்பூதூருக்குச் சென்று

சேர்ந்தார். அங்கு ஓராண்டுக் காலம் வித்யார்த்திகளுக்குத் தாம் பயின்ற ஸாமான்ய சாஸ்திரங்களைப் போதித்தார். அங்கிருந்த காலத்தில் தாம் கற்பித்ததோடன்றி, 'கல்வி கரையில' என்பதற்கேற்ப, ஆஸூரி பெரிய ராமாநுஜாசார்ய சுவாமியிடம் 'நியாய பாஸ்கரம்' என்னும் அளவை (தர்க்க) நூலையும் தெளியக் கற்றார்.

இவ்வாறு முதலில் எம்பெருமானார் இன்னருளுக்கு இலக்காகி, பின்னர் திருச்சித்திரகூடத்துக்கு எழுந்தருளி, அங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தர்க்க பாடபோதகராக இரண்டு மூன்று ஆண்டு பணிபுரிந்தார்.

சென்னை செய்த பாக்கியம்

வேதாந்தத்துக்கே இட்டுப் பிறந்தவராகையால் நம் வேங்கடவர் ஸாமான்ய சாஸ்திர போதனையோடு மட்டும் நிற்பதில் திருப்தி கொள்ளவில்லை; ஸ்ரீ ராஜகோபாலனின் க்ஷேத்திரத்தில் அருளாளன் தந்த வேங்கடவரைத் திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி விரும்பி ஏற்றான். 1937 முதல் சென்னையில் தங்கி நியதமாக, நமக்கெல்லாம் நல்வாழ்வு நல்கியருளினார் நம் சுவாமி.

சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாகச் சென்னையின் சந்தைக் கடை இரைச்சலுக்கு இடையே, இனிய தோர் வீணாநாதம் போல், பாலைவனத்திடையே ஒரு பசுஞ்சோலை போல், ஜீவனம் தேடி அலையும் மக்களிடையே உஜ்ஜீவன ஹேதுவாக, அஞ்ஞான இருளிலே இடருவார்க்கு ஒளி நல்கும் திருவிளக்காகத் திகழ்ந்தார் நம் ஸ்வாமி.

திருமேனி அழகு

'வஸ்த்ரேண வபுஷா வாசா' என்பர். தூய நல்வேஷ்டியும், மென்மையான இன்மொழியும், ஸத்துவ குணம் குடிகொண்ட எழில்மிகு தோற்றமும் வாய்ந்த நம் சுவாமியை சேவித்தவர் யாரும் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என ஈடுபடுவர்.

எம்பிரான் தன் பொன்னான திருமேனியைக் காட்டி, ஆழ்வார்களை ஈர்த்து, தீமனம் கெடுத்து மருவித்தொழும் மனமே தந்தான்.

எம்பெருமானார் திருமேனி அழகைக் கண்ட அமுதனார், 'கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித் தரிலும் நின் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்' என்று கண்ணன் அழகையும் கழித்து உடையவர் அழகில் ஊன்றி அநுபவித்தார்.

நம் சுவாமியை ஸேவித்தோர் யாரும் 'எம்பெருமானாரும் இப்படித்தான் இருந்திருப்பர்' என்றே ஈடுபட்டுக் கூறுவர்.

'அவரது உபந்யாஸ அழகும் கருத்தாழமும் ஒரு புறம் இருக்கட்டும்; சுவாமியை ஸேவித்தாலே போதுமே' என்று பலர் வாய் வெருவுவதை அடியேன் பலகால் கேட்டிருக்கிறேன்.

திருப்பவளச் செவ்வாய்

தோற்றம் நிற்க, சுவாமி திருவாய் மலர்ந்தருளும் போது, பூவலர்ந்தாற்போல் புன்னுறுவல் தவழும்; இன்சொல்லின் மணம் எங்கும் இனிது கமழும். அவரது பொன்னான திருமேனியில் ஏற்படும் ஒவ்வோர் அசைவும் ரஸமூட்டும் வகையில் அமைந்து காண்போர் கருத்தைக் கவரும். எழில்மிகு தோற்றத்தோடு

எல்லார் கண்களையும் கவர்ந்து அவர் மெல்ல நடந்து வந்து மேடையில் அமர்வதும், மௌனமாகச் சிறிது நேரம் உதடசைத்து ஆசார்ய த்யானம் செய்வதும், 'ஸ்ரீய: பதியாய்' என்று தொடங்கி வார்த்தைகளை ஒவ்வொன்றாக நிறுத்தி, அளந்து உச்சரித்து, படிப்படியாக உதிர்ப்பதும் நம் கவனத்தைக் கவ்விக் கருத்தை ஈர்க்கும்.

உலகில் எத்தனையோ வகைப் பால்கள் உள்ளன. அப்பாலெல்லாம் நல்ல ஆவின் (பசுவின்) பாலாமோ. உலகில் நூல்களும் பலப்பல. அவையெல்லாம் மாமுனியின் நன் நூலுக்கு இணையாமோ. மணவாள மாமுனிகள் மாதுர்யத்தை நம் சுவாமியின் நடையில் நன்கு காணலாம்.

நல்லாசிரியன் இலக்கணம்

நன்னூலில் சொன்ன நல்லாசிரியன் இலக்கணம் அத்தனையும் பொருந்தியவர் நம் சுவாமி.

'குலன், அருள், தெய்வங் கொள்கை, மேன்மை கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை' வாய்க்கப்பெற்றவர்;

பொறுமையிலும், பருவ முயற்சி அளவில் பயத்தலிலும் பூமியைப் போன்றவர்;

தோற்றத்திலும் வளம்தரும் வண்மையிலும் மலைபோன்றவர்;

ஐயம் தீரப் பொருளை உணர்த்தல், மெய் நடு நிலையில் பொன்னை நிறுக்கும் தராசு போன்றவர்.

சுவாமி உபந்யஸிக்கும் போது, ‘காலமும் இடனும், வாலிதின் நோக்கி சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி, உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து, விரையான், வெகுளான், விரும்பி முகம் மலர்ந்து கொள்வோன் கொள்வதை அறிந்து அவனுளங்கொளக் கோட்டமில் மனத்தில் நூல் கொடுத்தல்’ அவருக்கு இயல்பான சிறப்புக்கள்.

உபந்யஸிக்கும் போது, அடிக்கடி தம் நாவினால் தமது திருப்பவளத்தைத் தடவி ஈரப்படுத்திக் கொண்டு பேசுவது சுவாமியின் வழக்கங்களில் ஒன்று. இதைக் கூர்ந்து கவனித்து ‘நம் சுவாமியை இப்போது ஸேவிக்கும்போது, திருவனந் தாழ்வானின் நினைவே வருகின்றது. ஸர்ப்பம் நாவை நீட்டுவது போல, நாவினால் குழைத்து உதட்டைத்தடவும்போது, அந்த ஆதிசேஷனின் அவதாரமான எம்பெருமானாரைப் பார்ப்பது போலவே இருக்கிறது’ என்பார் சிலர் மற்றும் சிலரோ அதை ஆமோதிப்பதோடு அது மட்டுமல்லை யார் மனமும் புண்படாமல் ஸம்பிரதாய பேதங்களை எடுத்துக் காட்டும் பண்பும், ஸ்ரீவைஷ்ணவச் சிறு குழந்தை ஸேவித்தாலும் எதிர்கொண்டு சேவிக்கும் சீலமும், பணிவுடன் கூடிய எளிமையும், இன்முகம் காட்டி, புன்முறுவல் பூத்துப் பேசும் இயல்பும் எங்குமே காணமுடியாத ஓர் அற்புதமல்லவா? இது மாமுனிகள் நினைவையன்றோ நமக்கு ஊட்டுகின்றது’ என்று வியந்து கூறுவர்.

ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டி

சென்னையில் இன்று கதை சொல்லுவோர் தொகை பெருகிவருகிறது; சில வேதாந்த உபந்யாஸகர்களும்

உள்ளனர். பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளை அடியொற்றி க்ரந்த காலக்ஷேபம் மிக அரிது. கற்ற பல பண்டிதர்கள் தம் புலமையெல்லாம் காட்டுவதற்கு, ஒரு வாய்ப்பாகவே கருதி, பன் மொழிகளிலும் பற்பல மேற்கோள்களையும் அடுக்குவது காலக்ஷேபத்தில் இன்றுள்ள ஒரு புதிய பாணி.

சுவாமியின் கோஷ்டியோ விலக்ஷணமானது. பெரும்பாலும் க்ரந்த காலக்ஷேபங்களே நிகழும். எந்த க்ரந்தம் எடுத்தாலும் முதலில் அந்த நூலின் ஆசிரியராகவே மாறிவிடுவர் நம் சுவாமி.

பகவத் விஷயம் ஈடு வியாக்கியானமாகில் நம்பிள்ளையை நம் சுவாமியிடம் ஸேவிக்கலாம். ஸ்ரீபாஷ்யமாகில் உடையவரை தரிசிக்கலாம். ரகஸ்ய க்ரந்தங்களாகில் பிள்ளை உலகாசிரியரையும், மாமுனிகளையும் பார்த்து மகிழலாம்; அருளிச் செயல்களோ, ஸ்ரீராமாயணமோவாகில், வியாக்கியான சக்கரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளையை அநுபவிக்கலாம். தாத்பர்ய சந்த்திகையாகில் தேசிகனைப் பருகலாம். ஸ்தோத்ரங்களாகில், ஆளவந்தார், ஆழ்வான், பட்டர் அத்தனை பேரும் நம் சுவாமியிடத்தில் ஸேவை ஸாதிப்பர்.

சிறு விஷயங்களையும் விடாமல் ஊன்றி நோக்குவது மஹான்களின் இயல்வு. நம் சுவாமி எம்பெருமானாரை அடியொற்றி வியாக்கியானங்களில் நுணுக்கமான பல அம்சங்களையும் விடாமல் விவரித்து மகிழ்விப்பர்.

பிற மதத்தினர் மனம் புண்படாமல் தன் மதம் விடாமல் கூறும் தனி இயல்வு சுவாமிக்கு உடன்பிறந்த ஒன்று.

பல நூல் புனையாத காரணம்:

திவ்ய ப்ரபந்தம் அனைத்துக்கும் உரை எழுதி, வியாக்கியான சக்கரவர்த்தி என விருது பெற்றவர் பெரிய வாச்சான் பிள்ளை. பெரியாழ்வார் திருமொழிக்கு அவர் இயற்றிய உரையின் ஒரு பகுதி பிற்காலத்தில் கவனக் குறைவால் கறையானுக்கு இரையாயிற்று. மாமுனி காலத்தில் அவரது பிரபாவம் கண்ட பெரியோர் பலர், அவரிடம் அடிபணிந்து, பெரியாழ்வார் திருமொழிக்குப் பூரணமாக ஓர் உரை அருளுமாறு வேண்டினர். மாமுனிகளும் இசைந்து, செல்லரித்த அந்தப் பகுதி வரையுள்ள பாசுரங்களுக்கு மட்டும் உரை எழுதி, மேலே ஒரு வரியும் எழுதாமல் நின்று விட்டார்.

மாதுரியம் மிக்க மாமுனிகளின் உரையைக் கண்ட பலரும் பிரபந்த முழுவதுக்கும் சுவாமி உரை அருளலாகாதோ என வேண்ட, பூர்வாசார்ய உரையிருக்க அடியேன் எழுதுவது முறையன்று என சிஷ்யர்களை சிக்ஷித்தார் மாமுனிகள். அக்கருத்தை ஒட்டியே பின்னால் வந்த நம் பெரியோர் பலரும் சுதந்திரமாக நூல் எழுதுவதில்லை. அந்நிலையை நம் சுவாமியும் மேற்கொண்டவர்.

ஆயினும், ஸம்பிரதாயங்களில் ஐயம் தோன்றுமிடங் களில் தெளிவு பிறக்க, பூர்வாசார்யர்களின் வழியைப் பின்பற்றிச் சில நூல்கள் இயற்றவும் நம் சுவாமி தயங்கவில்லை; 'திரௌபதியும் திருநாமமும்' 'ஆராய்ச்சித் திரள்' 'ஸ்ரீராமாயண ஸாரம்', 'கீதாஸாரம்' போன்ற சுருக்க விளக்க நூல்கள் வந்துள்ளன.

அவற்றுள் 'திரௌபதியும் திருநாமமும்' என்னும் நூல் ஸம்பிரதாயத் தெளிவு பிறப்பிப்பதில், ஈடு இணையற்ற

ஆராய்ச்சி நூலாகும். எதிர்ப்புகளைக் கண்டு தயங்காமல் ஸம்பிரதாயத் தெளிவுரைகளை நல்கினார். பிறர் மினுக்கம் பொறாமையில்லாப் பெருமை பெற்ற ஸாத்துவிக மூர்த்தி அவர். "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்ற திருமழிசைப்பிரான் வாக்குக்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியவர் நம் ஸ்வாமி.

> *'குற்றம் செய்தவர் பக்கல் பொறையும், க்ருபையும், சிரிப்பும், உகப்பும், உபகாரஸ்ம்ருதியும்' கொண்டு வாழ்ந்தவர் நம் ஸ்வாமி.*

ப்ரவசனப் பணி

1. **கீதை:** கீதாசார்யனின் பரம க்ருபையினால் சுவாமிக்கு கீதையில் விசேஷத்திறன் வாய்ந்து ப்ரவசனப் பணியும் சிறந்து விளங்கியது. இதுவரை கீதை மட்டுமே பூரணமாகப் பத்து, பதினோரு தடவைகள் நடைபெற்றுள்ளன. அதில் நான்கைந்து முறை ஸ்ரீபார்த்தஸாரதியின் முன்னிலையிலேயே நிகழ்ந்தவை. மாம்பலம், மயிலை, டவுன் மற்றும் வெளியூர்களில் கோவை, சித்தூர், பம்பாய், மதுரை ஆகிய இடங்களில் கீதையைப் பரப்பினார் சுவாமி. காகுமானி சாரிடி கட்டிடத்தில் கீதா பாஷ்யம் தாத்பரிய சந்த்திரிகையுடன் நடைபெற்று, சமீபத்தில் பூர்த்தியாயிற்று.

2. **பகவத் விஷயம்:** ஈடு விரிவுரையுடன் பகவத் விஷயம் மட்டுமே மூன்று முறை சாற்றுமறை கண்டிருக்கிறார் சுவாமி. இம் மஹா க்ரந்தம் ஆயுள் நாளளவும் முயன்றாலும் முற்றுப் பெறுவது பலர்க்கு அரிதாயிருக்கிறது. காகுமானி

ஆதிகேசவலு சாரிடி, மாம்பலம் அமுதம், திருவல்லிக் கேணி ஆகிய பலவிடங்களில் பூர்த்தி பெற்ற இப்பெரு நூல் ஆறாம் முறையாக சுவாமி திருமாளிகையிலும், மயிலை ஸ்ரீமாதவப் பெருமாள் மற்றும் கேசவப் பெருமாள் சந்நிதியிலுமாக நடைபெற்றது. ஆனால் பூர்த்தி பெறவில்லை.

3. **ஸ்ரீபாஷ்யம்:** சென்னகேசவன் ஸந்நிதியில் ச்ருத ப்ரகாசிகையுடன் பூரணமாக நடைபெற்றது. திருவல்லிக் கேணி, மாம்பலம் ஆகிய இடங்களில் உபந்யாஸங்களாக நிகழ்ந்தது. பிறகு திருமாளிகையில் ச்ருதப் ப்ரகாசிகையுடன் நடந்து வந்தது. காலத்தின் கோலம் அது பூர்த்தி பெறவில்லை.

4. **ஸ்ரீராமாயணம்:** சுலோகம் விடாமல் மாம்பலத்திலும், காசிச் செட்டித் தெருவிலும் இருமுறை ஸ்ரீராமாயணம் பூர்த்தி பெற்றதுண்டு. இது தவிர, பற்பல இடங்களில் உபந்யாஸத் தொகுப்புகளாகப் பல முறை சக்கரவர்த்தித் திருமகன் பட்டாபிஷேகம் கண்டருளியுள்ளார். பின்னர் சென்ன கேசவன் ஸந்நிதியில் அத்தகைய உபந்யாஸங்கள் நடைபெற்று ஒருவாறு பூர்த்தியுற்றது.

5. **ஸ்ரீபாகவதம்:** சுலோகம் விடாமல், மாம்பலத்திலும், காகுமானி சாரிடியுலும் வீரராகவீயத்துடன் இருமுறை நடைபெற்று பூர்த்தியடைந்தது. மற்றும் தசம ஸ்கந்தம், ஏகாதச ஸ்கந்தம் ஆகிய பகுதிகள் மட்டும், ஆலந்தூர், மயிலை கேசவன் ஸந்நிதி ஆகிய இடங்களிலும், மற்றும் வெளியூர்களிலும் ஸப்தாஹ க்ரமத்தில் பல இடங்களில் பற்பல தடவைகள் நிகழ்ந்துள்ளன. சமீபத்தில் காகுமானி

சாரிடியில் பாகவதம் உடல் நலக்குறைவால் இடையில் நின்றது.

6. ஸ்ரீவிஷ்ணுபுராணம்: திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி பக்த ஸமாஜம், சென்னை கீதா சங்கம் ஆகியவற்றில் எங்களாழ்வான் உரையுடன் பூர்ணமாக நடைபெற்றது.

7. சஹஸ்ர நாம பாஷ்யம்: காகுமானி சாரிடி, வானமாமலை மடம் ஆகிய இடங்களில் பட்டர் பாஷ்யத்துடன் ஸஹஸ்ர நாமம் விரிவாக நடைபெற்றது.

8. மஹாபாரதம்: திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் பார்த்தசாரதி பக்த ஸமாஜம் ஆதரவில் மஹாபாரதம் ச்லோகம் விடாமல் விரிவாக நடைபெற்றது. 1966 ஏப். 18உ கீதை சாற்றுமுறை நடைபெற்று பிறகு தர்மராஜ பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியுற்றது.

9. ரஹஸ்யங்கள்: (அ) ஸ்ரீவசனபூஷணம்: மயிலை மாதவன் ஸந்நிதி, டவுனில் ஒரு தடவை, திருவல்லிக்கேணியில் மூன்று தடவைகள், மாமுனி உரையுடன் சிறப்பாக நடைபெற்றது.

(ஆ) முமுக்ஷுப்படி: சுமார் பத்து தடவைகளுக்கு மேல் சென்னையின் பல பகுதிகளிலும் நடைபெற்றுப் பல சிஷ்யர்களும் சொரூப ஞானம் பெற வாய்த்தது.

(இ) ஆசாரிய ஹ்ருதயம்: டவுனிலும், திருவல்லிக் கேணியிலும், மயிலையிலுமாக மும்முறை ஆசாரிய ஹ்ருதயம் பூர்த்தி பெற்றுள்ளது. சுவாமி திருமாளிகையிலும் ஒரு முறை நடைபெற்று பூர்த்தியடைந்தது.

(ஈ) தத்வத்ரயம்: திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் ஒரு முறை விரிவாக பூரணமாக தத்வத்ரயம் கேட்டுப் பலர் தெளிவு பெற்றனர்.

10. மற்ற ப்ரபந்தங்கள்: சென்னை கீதா சங்கத்தில் நாச்சியார் திருமொழியும், காகுமானி சாரிடியில் திருவிருத்தமும், திருமழிசை டி.ஏ. ரங்காச்சாரியர் அகத்தில் திருநெடுந் தாண்டகமும் நடைபெற்றன. திருவல்லிக்கேணி பார்த்த சாரதி சந்நிதியில் 'அஷ்டச்லோகியும்', ஸ்ரீவானமாமலை மடத்தில் 'சது:ச்லோகியும்' உரையுடன் விரிவாக நடைபெற்றன.

11. திருப்பாவை : இதைத் தவிர வருடம் தோறும் மார்கழியில் திருப்பாவை நடைபெற்று வருவது உலக ப்ரஸித்தம். இதுவரை ஐம்பது கடவைக்கு மேல் நடந்துள்ளது. டாக்டர் வி. ராமய்யங்கால் திருப்பாவையில் விசேஷ கவ்னம் செலுத்தி சுவாமியைச் சென்னைக்கு நன்கு அறிமுகப்படுத்தி வைத்ததை யாரும் மறக்க முடியாது.

தி. நகர் சாரதா உயர்நிலைப்பள்ளி, சென்னை, கோவிந்தப்ப நாயகன் தெருவில், கலவல கண்ணன் செட்டி சாரிடீஸ் காலக்ஷேபங்கள் குறிப்பிடத்தக்கன.

பூர்வம் புத்தகம் பாராமல் சொல்லுவதில்லை நம் சுவாமி, நாள் பூராவும் நூல்களைப் பார்ப்பதும், காலை மாலைகளில் உபதேசிப்பதுமாகவே பொழுது போய் விடுகிறது.

மாம்பலம் காலக்ஷேபங்களுக்கு இடவசதி செய்து அதற்கென 'அமுதம்' என்ற மண்டபம் அமைத்து, திருமழிசை

டி.ஏ. ரங்காச்சாரியர் (இப்போது வைகுண்டவாஸி) செய்த மஹோபகாரமும் மறக்க வொண்ணாதது. சென்னையில் முக்காலு நம்மாழ்வார் செட்டி, காகுமானி சாரிடியார், சென்னை கேசவன் சந்நிதி நிர்வாகிகள், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பக்த சமாஜத்தார், மற்றும் பலர் சுவாமி விஷயத்தில் அக்கறை கொண்டிருந்தது சென்னையின் பாக்கியம்.

வெளியூர்களில் : சுவாமியின் திருமேனி பாங்கில் லாமையால் வெளியூர்ப் பயணங்களை விரும்புவதில்லை. ஆயினும் கோவை, தஞ்சை, மன்னார்குடி, மதுரை, தென் திருப்பேரை, ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர், உடுமலைப் பேட்டை, சித்தூர், சேலம், பம்பாய், டில்லி முதலிய பல விடங்களிலும் சில பல நாட்கள் தங்கி உபந்யஸித்துள்ளார்.

க்ரந்த காலக்ஷேபங்கள், உபந்யாஸங்கள் தவிர திருப்பாவை ஸதஸுகள், வித்வத்ஸதஸுகள். வாக்கியார்த்த கோஷ்டிகள், ஆரம்ப விழாக்கள், பாராட்டுரைகள், நூல் வெளியீட்டு விழாக்கள் பலவற்றுக்கும் சுவாமி சென்று கலந் ததுண்டு. எந்த இடத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் சுவாமியின் திருவாக்கு பழுது போனதில்லை. ரஸிகர் உள்ளத்தைக் கவர ஒரு போதும் தவறியதில்லை. மணவாள மாமுனிகள் அறுநூறாண்டு விழாவுக்காக அடியேன் வெளியிட்ட 'அழகிய மணவாள மாமுனிவன்' வெளியீட்டு விழாவில் சுவாமி அருளிய ஆசியுரையை யாரும் என்றும் மறக்கவே முடியாது.

பொருள் வழித்தூய்மை : எல்லாவற்றிற்கும் சிகரமாக சுவாமியின் பண்பு மிளிர்வது அவர் பொருள் வழியில் கடைப்பிடித்த தூய்மைதான். சுவாமி குடும்பம் பெரியதே,

ஆயினும் அவர் தேக யாத்திரை பற்றிக் கவலை கொண்டதே இல்லை. கர்மாநுகுணமாக நடப்பது நடக்கட்டும் என்றே ஆறியிருப்பர். வேதாந்தத்துக்குப் பயன் பொன்னும் பொருளுமன்று, புகழும் பூஜையுமன்று; மனஸ் ஸந்துஷ்டியே, வாழ்க்கை அமைதியே என்பதை அவரது நிஷ்டையில் காணலாம்.

'பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை' என்று எவ்வழியிலும் பொருள் தேடும் இயல்புள்ள இன்றைய உலகில் சுவாமி ஒரு விதி விலக்கு. வேதாந்தத்துக்கு விலை பேசாத தனிச்சிறப்பு அவருக்குண்டு. காலக்ஷேபம் ஏற்பாடு செய்வோரிடம் அவர் கேட்பது 'என்ன தலைப்பு? எவ்வளவு நேரம் பேசவேணும்? என்பது தான். மற்றவை பற்றிப் பேசுவதில்லை மற்றவரிடம் அதிகமாகப் பழகவும் மாட்டார். லௌகிகப் பிரமுகர்களைப் புகழ்வதும், தட்டெடுத்து வசூலிக்கும் முறைகளும் அவருக்குக் கட்டோடு பிடிக்காது.

ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிகள் மட்டுமின்றி மத்வ மடாதி பதிகள், கௌடிய மடம், போன்ற மற்ற வைணவ ஸதஸ்களிலும் அவர் விரும்பிக் கலப்பதுண்டு.

நாவல்பாக்கத்தில் அவருக்கு அளித்த வரவேற்பு, நவதிருப்பதியில் அநுபவம், திருமலை உபந்யாஸம், மத்வ மடாதிபதிகள் முன்னிலையில் மதத்ரய உபந்யாஸத்தில் அவரது விசிஷ்டாத்வைத விவரணம், திருப்பாவை ஸதஸ்களில் சில நிமிஷப் பேச்சுக்கள் ஆகியவை என்றும் நினைவில் நிற்பவை,

சிஷ்ய ஸம்பத்து

சென்னை கேசவன் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்ய கோஷ்டியில் அந்வயித்த சிரோமணிகள் : உ.வே. வேளுக்குடி வரதாச்சார்யர், உ.வே. பிள்ளைலோகம் பாஷ்யகாரர், உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசாரியர், உ.வே காரப்பங்காடு ரங்கராமாநுஜாசாரியர் போன்றோர் இன்று நாடெங்கும் உபந்யஸித்து சுவாமியின் கீர்த்தியைப் பரப்பி வருகின்றனர். (இப்போது இந்நால்வருமே வைகுண்ட வாசிகள்).

மற்றும் சுவாமி திருமாளிகையில் நடை பெற்று வந்த ஸ்ரீபாஷ்யம் பகவத்விஷய கோஷ்டியில், பிரசித்தமான கோவர்த்தனம் ரங்காசார்ய ஸ்வாமி, திருமணி ஸ்வாமி குமாரர்கள் மூவர் முறையே ஸ்ரீ கோ.க.வா அப்பன் ஸ்ரீநிவாஸாசாரியர், குமார வேங்கடாசார்யர், அப்பன் ராமாநுஜாசாரியர், மற்றும் பிள்ளைலோகம் ஸ்தல சயனத்துறைவார், மேல்கோட்டை லக்ஷ்மி தாதாச்சாரியர், அரையர் ஸ்ரீராம அய்யங்கார், ஆகியோருடன் - அடியேனும் முழுமையாக அந்வயித்து வந்தவன். மற்றம் பல சிஷ்யர்கள் அவ்வப்போது நூல்களை அதிகரித்து நாட்டின் பல பகுதிகளிலும் பரவியுள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர், வித்வான் வி.கே. ஸ்ரீநிவாஸாசாரியரும் அவர் போன்ற சிலரும் குறிப்பிடத்தக்கவர்கள். சுவாமியின் சிஷ்யர்களும் அடியேனில் தாழ்ந்தார் இல்லை. சென்ற இருபது ஆண்டுக்கும் மேலாக சுவாமி திருவடிவாரத்தில் நெருங்கி வர்த்தித்தவன். மாமுனிகளின் உரைகள் பெற்ற உலகாரியர் ரகசிய நூல்கள் அனைத்தும் வரியடைவே பெற்றவன் அடியேன்.

காரப்பங்காடு ஸ்ரீ உ.வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியிடம் காலட்சேபம் பண்ணிய திருமணி ஸ்வாமி பெரியவரின் குமாரர்கள் மூவரும் ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியிடம் காலக்ஷேபம் கேட்டது குறிப்பிடத்தக்கது. அடியேனும் அதில் அந்வயித்தவன்; ஆசார்ய அபிமானம் பெற்றவன்.

நிர்வாகத்திறன்

ஒரு விஷயம், சுவாமி எம்பெருமானாரை 'தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே' என வாழ்த்துவர். ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகத்திறன் கண்டு அவ்வாறு வாழ்த்தினர். சமீபத்தில் ஆந்திராவில் 'புல்லல செரு' என்ற இடத்தில் சக்கரவர்த்தி திருமகன் ஸந்நிதி ஸம்ப்ரோக்ஷணத்தில் அத்தகைய நிர்வாகத்திறனை நாம் சுவாமியிடம் நேரில் கண்டோம்.

காலக்ஷேப கோஷ்டியில் சுவாமியை எப்போதும் தொடர்ந்து துணைநின்றவர்களில், ஸி.ஆர். சீனிவாச ஐயங்கார், ஜக்கம்பேட்டை ராணி சேஷம்மாள், எஸ். ராமசாமி அய்யங்கார், பத்மாசனி அம்மாள் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஸ்வாமியின் மணிவிழா

சுவாமியின் ஷஷ்டியப்தபூர்த்தி விழா 9-3-66 ஐந்து நாட்களுக்கான ஏற்பாடுகளுடன் நடைபெற முக்காலு நம்மாழ்வார் செட்டி தலைமையில் ஒரு கமிட்டி அமைத்தது. விழாவும் மயிலை மாதவன் சந்நிதி அருகில் கோலாஹலமாக

நடைபெற்றது. கடைசி நாளன்று காலை திருக்கல்யாணம் சிறப்பாக அமைந்தது. நாடெங்குமிருந்து அநேகமாக எல்லா திவ்ய தேசங்களிலுமிருந்து கோயில் மரியாதைகள், பத்திரிகைப் பாராட்டுக்கள், பக்தர்களின் பாதகாணிக்கைகள், மடாதிபதிகளின் வித்வத் ஸம்பாவனைகள், வேத பாராயண அத்யாபக ஸ்வாமி சம்மானங்கள், சிஷ்யர்கள் மற்றும் [illegible] நிறைந்த [illegible] சிறந்து [illegible]

[illegible] சிறப்பாக [illegible] விட்டது! [illegible]

அவலம் சூழ்ந்தது

ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் [illegible] அயோத்தி மாநகரம் தன்னை [illegible] ஆரவாரத்துடன் விளங்கியது.

எங்கோ தோன்றிய கூனியின் இரவில் [illegible] முளைத்த சூழ்ச்சி போல், யாருடைய விஷ [illegible] கலியின் கொடுமையோ, காலத்தின் அலங்கோலமோ, [illegible] காண முடியவில்லை; மத்தியான்னம் சுவாமியின் மாப்பிள்ளை (இரண்டாவது பெண்ணின் கணவன்) திடீரென்று மயக்கமுற்று மரணமடைந்தார். மணக் கோலம் பூண்ட திருமாளிகையில் மரண அவலம் சூழ்ந்தது.

முடிசூடவேண்டிய முகூர்த்தத்தில் பெருமாள் காட்டுக்குப் புறப்பட்டபோது, அயோத்தி அழுது புரண்டது; அலங்கோலம்

பூண்டது; அரற்றி நின்றது. நம் சுவாமியும் ஸ்ரீராமனைப் போல் புனர்வஸு"வில் தோன்றி, அவனைப் போல், தம் திருமேனி அழகாலும் அரிய ஆத்ம குணங்களாலும் எல்லாரது கண்ணையும். கருத்தையும் ஈர்த்தவர் என்ற காரணத்தாலோ என்னவோ - இத்தகைய ஓர் அவல நிகழ்ச்சியும் ராமனது சரிதம் போல் அவரது வாழ்விலும் இடம் பெற்றுவிட்டது. ஸ்ரீ ராமனைப்போல் புனர்வசுவில் தோன்றினார் அல்லவா?

அன்றைய சென்னை முதல்வர் பக்தவத்ஸலம் தலைமையில் நடைபெற இருந்த மணிவிழா மலர் வெளியீடு நிகழ்ச்சி கைவிடப்பட்டது. பின்னர் வேறொரு நாளில் ஒருவாறு நடைபெற்றது. அன்று மலர்க்கட்டுரைகளுக்கு அடியேன் இட்ட 'ஸ்ரீவைஷ்ணவ ரத்ன மாலா' என்ற பெயரில் பல நூல்கள் இன்றும் வெளிவருகின்றன.

இதற்குப்பின் சுவாமி வாழ்வில் பல இன்னல்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்தன; எனினும் எம்வேங்கடவர் எதற்கும் சலிக்கவில்லை. மாறாக உள்ளம் உரம் பெற்று ஞான ஒளி வீசித் திகழ்ந்தார். 'கொடு உலகம் காட்டேல்; கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ' என்று ஆழ்வார் சம்சாரத்தில் அடிக்கொதிப்பாலே, ஆர்த்தி மிகுந்து அரற்றியது போல், சுவாமியின் நிலையும் மாறி வந்தது.

இன்ப துன்பங்களில்

அவரது திருவுள்ளம் மிக மென்மையானது; ஆனால் உறுதியானது; தூய்மை வாய்ந்தது. அவர் இன்பத்தில் எக்களிக்கவில்லை; துன்பத்தில் துவண்டு நிற்கவில்லை. அவரது இதயம் எதையும் தாங்கி நின்றது; ஆனால் உடல் தளர்ந்து விட்டது; நோயக்ள் தோன்றின; பகவான் சுவாமியை

இங்கு நெடுநாள் விட்டு வைக்க விரும்பவில்லை போலும்! படிப்படியாக உடல் பழுதுற்றது. அழகிய திருமேனி சென்ற ஐந்தாறு ஆண்டுக்குள்ளாக உருக்குலைந்தது ஆனாலும் அவரது நிஷ்டை மட்டும் குலையவில்லை. வெகு சிரமப்பட்டும் கால க்ஷேபங்களை அவர் விடவில்லை. உடல் நோய்க்கு கிரந்த காலக்ஷேபங்களில் தான் ஆறுதல் கண்டார். இதற்காகவே ஸ்ரீ எம்.ஆர். சம்பத்குமாரனுக்கு திருமாளிகையில் தனித்து கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம் போன்ற கிரந்தங்களை நடத்தி வந்தார்.

கடலில் ஆழ்ந்த கதிரவன்

நோயுற்ற காலத்தில் அவரது குமாரர்களில் ஒருவரான ராமாநுஜன் (ராமு) உடனிருந்து தந்தைக்குப் பணிவிடைகளை செவ்வனே புரிந்தார். தேகநிலை சரியில்லாத தேவிகளும் அரும்பணி ஆற்றினார். டாக்டர் ராம அய்யங்கார் பெங்களூர் வாசத்தை விட்டு மயிலையில் தங்கி தினமும் நம் சுவாமியின் திருமேனியைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து மருத்துவ உதவிகளைச் செய்தார். ஆயினும் பயனில்லை. சுவாமி நடமாட்டமின்றி படுக்கையில் சாய்ந்து விட்டார். இமயம் சாய்ந்தது; இருள் சூழ்ந்தது! ஞானசூரியன் கடலில் ஆழ்ந்தான். அந்தோ! நம்மைத் துயரக்கடலில் ஆழ்த்தி, 7-8-71 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுவாமி ஆசார்யன் திருவடி அடைந்து விட்டார். ஸ்வாமிக்கு ஐந்து குமாரர்களும் நான்கு குமாரத்திகளும் உள்ளனர்.

'நாய்க்குடலில் நறு நெய் தொங்காது; நல்லோர் நலமுற, ஏற்புடையோர் எழுச்சியுடன் விளங்க, இவ்வுலகம் இடமளிக்காது போலும்! நல்லோரைக் காட்டி, ருசியையும்

ஊட்டி, நன்மைகளை முடிய நடத்தாமல் இவ்விருள் தருமா ஞாலம் தானே விழுங்கி விடுகிறதோ! இதுதான் எல்லா மகான்களின் வரலாறும் முடிவுமாகத் தெரிகிறது.

'மருளொழி நீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடி வணங்கே' என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் பொருள் உணர்ந்து, அநுசந்தித்து ஆறுதல் அடைவோமாக!

சரம ச்லோகம் :

அப்தேமுத்ர விரோதி க்ருத்யுபகதே பாநௌகுலீரம் சதே |
க்ருஷ்ணேஸௌரிதிநே ஹூதாஸநதிதௌ ஸ்ரீ
பூதஸூரீந்த்ரபே |
வேதாந்தத்வய சைல கந்தரசர: ஸ்ரீவேங்கட: கேஸரீ
விஷ்ணோரங்க்ரியுகீதரீம் நிஜகுரோ: த்ருஷ்ட்யாப
லோகேபரே ||
விரோதிக்ருதி க்ருஷ்ணஸ்ய ப்ரதமே கர்க்கடே சனௌ ||
ஆத்ரேய வேங்கடாசார்ய: ஸ்வாசார்ய சரணாவகாத் ||

அப்பன் திருவடிகளே சரணம்!

ஸ்வாமி திருநக்ஷத்ரத் தனியன்

விச்வாவஸௌ ஸிம்ஹமாஸே புநர்வஸ்வர்க்ஷ ஸம்பவம்|
வந்தேயாத்ரேயமாசார்யம் காரப்பன்காடு வேங்கடம்||

ஸ்வாமி சரமத் தனியன்

விரோதிக்ருத் கர்கடே து பக்ஷே மாத்ய நிதௌ சநௌ|
ஆத்ரேயவேங்கடாசார்ய: ஸ்வாசார்யபதமந்வகாத்|